Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11

வேணு : 16 நவம்பர் 2010 கானம் : 3



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083, and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Related Websites : www.namadwaar.org
Email:contact@namadwaar.org

NO FAME · NO SELF INTEREST · ONLY GOD · NO NAME

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 16 | நவம்பர் 2010 | கானம் : 4





உசிலம்பட்டி – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை 20.09.2010



அம்பாசமுத்திரம் மேல்நிலைப்பள்ளி – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை 23.09.2010





தூத்துக்குடி கார்ப்பொரேஷன் திருமண மண்டபம் – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை 24.09.2010



சிவகாசி இண்டஸ்டிரீஸ் சாரிடீஸ் திருமண மண்டபம் – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை 25.09.2010





கோவில்பட்டி ஆர்த்தி மஹால் – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை 26.09.2010



விருதுநகர் லக்ஷ்மி மஹால் – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை 27.09.2010





பெரியகுளம் NSN திருமணமண்டபம் – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை 28.09.2010



மதுரை செல்லம் ஸரஸ்வதி திருமணமண்டபம் – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை 29.09.2010



சென்னை ப்ரேமிக பவனம் ஸ்ரீனிவாச பெருமாள் அவதார உத்ஸவம் 17.10.2010



சென்னை மயிலை சாஸ்திரி ஹால் – ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர் ஜெயந்தி – 03.10.2010



கல்லிடைக்குறிச்சி சிருங்கேரி சாரதாமண்டபம் – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை 28.09.2010



உடுமலைப்பேட்டை GVG கலை அரங்கம் – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை 10.10.2010




ராணிப்பேட்டை- மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை 23.10.2010







ஆஸ்திரேலியாவில் காந்தி ஜெயந்தியன்று - மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - சிறப்பு விருந்தினர் பாராளுமன்ற உறுப்பினர் ஜூலி ஓவன்ஸ் உடன் டாக்டர் ஆ. பாக்யநாதன்




ஆஸ்திரேலியாவில் மதுரஸ்மரணம் - "My Guru As I See HIM" by டாக்டர் ஆ. பாக்யநாதன்




ஆஸ்திரேலியாவில் காந்தி ஜெயந்தியன்று - மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை



ஆஸ்திரேலியாவில் மதுரஸ்மரணம் - "My Guru As I See HIM" உபன்யாசங்களின்பொழுது






மும்பையில் ஸ்ரீமத்பாகவதம் Ancient Wisdom for Modern Times - அக்டோபர் 10-16 - உபன்யாசம் ஸ்ரீராமானுஜம்



ஆஸ்திரேலியா ஹார்ன்ஸ்பையில் சத்சங்கம்



'Happiness at Work' and 'Ethics' - AICSI-CCGRTயில் - அக்டோபர் 1 - Lecture by Sri Ramanujam



இந்தோனேஷியாவில் "கோபகுளம்"





மலேசியாவில் மஹாமந்திர "Meditation Workshop" - டாக்டர்.ஆ.பாக்யநாதன்



ஆஸ்திரேலியாவில் மஹாமந்திர "Meditation Workshop" - டாக்டர்.ஆ.பாக்யநாதன்



மலேசியாவில் பள்ளியில் சிறார்களுடன் மஹாமந்திர சத்சங்கம்



ஆஸ்திரேலியாவில் மஹாமந்திர "Meditation Workshop"

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதா ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை
வேணு:16 நவம்பர் 2010 கானம்:4

மதுரமான மஹனீயர் - 176 03
எது பக்தி? 11
பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் 06
சாதகரின் டைரிக்குறிப்பு-4 05

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

பாதஸம்வாஹனம் சக்ரு: கேசித் தஸ்ய மஹாத்மன: |
அபரே ஹதபாப்மாநோ வ்யஜனை: ஸமவீஜன் ||

**கண்ணனுடன் மாடு மேய்த்துகொண்டிருந்தார்கள் சிறுவர்கள். கண்ணன், மரத்தடியில் சிறிது நேரம் படுத்து ஓய்வெடுத்து கொள்வான். அப்பொழுது, சிலர் கண்ணனுடைய கால்களை பிடித்து விட்டார்கள். சிலர் விசிறி கொண்டு விசிறினார்ர்கள். அதனால், அவர்கள் தங்களுடைய பாவங்களை போக்கி கொண்டார்கள். அவர்களுக்கு பாவம் ஏது? உண்மையான மஹாத்மாவுக்கு நாம் பாதஸேவை செய்வதனாலும், அவருக்கு விசுறுவதாலும், நம்முடைய பாவங்கள் எல்லாம் அழியும் என்பதைத்தான், இந்த ஸ்லோகம் தெரிவிக்கின்றது.**

**ஸ்ரீமத்பாகவதம் 10-15-17**



## ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களின் மேல் ஜெயந்தி தின வாழ்த்துப் பா!



பொன்னான நாளாமிது பொன்னான நாளாம்
பொன்ஞாயிறு அவனியில் உதித்திட்ட நாளாம்

பொன்விழா ஆண்டது தொடங்கிய நாளாம்
பொற்காலம் நம்வாழ்வில் துளிர்விட்ட நாளாம்

பொன்னடி பாரினில் பதிந்த நன்னாளாம்
பேதைகள் வாழ்விலின்பம் தொடங்கிய நாளாம்

புள்ளினமும் மாவினமும் மகிழும் நன்னாளாம்
புவியெங்கும் நல்வாழ்வு மலர்ந்திட்ட நாளாம்!

புற்பூண்டு முதற்கொண்டு செழித்த நன்னாளாம்
புவியெங்கும் கார்மேகம் குளிர்வித்த நாளாம்!

வையகமும் வானகமும் போற்றும் நன்னாளாம்
வாழும் உயிர் அத்தனையும் வாழ்வு பெறும் நாளாம்!

மங்களங்கள் யாவும் நிறைந்த நன்னாளாம்
மங்காத ஒளி வாழ்வில் சூழ்ந்த நாளாம்!

மூவரும் தேவரும் போற்றும் நன்னாளாம்
மூவுலகில் கருணைமழை பொழிந்திட்ட நாளாம்!

முழுநிலா ஒளிர்ந்திட தொடங்கிய நாளாம்
மூடர்கள் வாழ்விலொளி சுடர் விட்ட நாளாம்!

ஐப்பசி ஸ்வாதி எனும் மங்கள நாளாம்
சத்குரு முரளீதரன் அவதாரத் திருநாளாம்!

போற்றினோம் நின்பணி; போற்றினோம் நின்கொடை
போற்றினோம் நின் புகழ்; போற்றினோம் நின்னடி!

வாழ்க நீ எம்மான்! வாழ்க என் பெம்மான்!
வாழி பல்லாண்டு வாழியென்றே!!

-ஸ்ரீபாலாஜி ராமச்சந்திரன்



## மதுரமான மஹனீயர் - 176

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

நான்கு வருடங்களுக்கு முன்பாக ஸ்ரீஸ்வாமிஜி தூத்துக்குடியில் பக்தர் கதிரேசன் இல்லத்தில் ஓர்நாள் பல விஷயங்களை பேசினார். அப்பொழுது, "எவ்வளவோ ஊரில், பலநாட்கள் தங்கி, பிரவசனம் எல்லாம் செய்கின்றோம். புரியாத மொழியில் அஷ்டபதி, அபங்கம் என்று பாடுகின்றோம். அதன் ராக இனிமையும் தாளகட்டும், எல்லோருக்கும் ஒரு ஈர்ப்பை தருகின்றதே தவிர அதன் அர்த்தம் அவர்களுக்கு புரியாது.

சுலபமாக எல்லோருடைய கஷ்டங்களுக்கும் விமோசனம் ஏற்படும்படியாக கூட்டு பிரார்த்தனை செய்யவேண்டும் என்று எனக்குள்ளே தோன்றிக்கொண்டே இருக்கின்றது. மஹாத்மா காந்தி கூட பிரார்த்தனை கூட்டங்களை நடத்தி உள்ளார். கதை கேட்டோம், பஜனை கேட்டோம், அர்ச்சனை செய்தோம், ஹோமத்திற்கு பணம் கொடுத்தோம், பரிகாரங்கள் செய்தோம் என்று எல்லோரும் சொல்வதை கேட்கின்றோம்.

ஆனால், கருணையே உருவான பகவானிடம் பிரார்த்தனை செய்தோம் என்று ஏன் சொல்வதில்லை. பிரார்த்தனை சுலபமாக இருக்கவேண்டும். அதுவும் வியாபாரமாகி விடக்கூடாது. பிரார்த்தனை வலிமை மிக்கது. சுலபத்தில் பலன் தரக்கூடியது. கலியினால்தான் மக்கள் இவ்வளவு துன்பத்தை அனுபவிக்கின்றார்கள். அந்த கலி உபாதையை மஹாமந்திரத்தால்தான் மட்டும் சுலபத்தில் போக்க முடியும் என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும்" என்று ஸ்ரீஸ்வாமிஜி ஒரு உத்வேகத்துடன் சொல்லி வந்தார்கள்.

மேலும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், "இதைத்தான் காஞ்சி மஹாஸ்வாமிகளும் ஆசைப்பட்டார். அந்தக்காலத்தில் சினிமாவில் நடித்து வந்தவரும் ஆன்மீகத்தில் விருப்பமுள்ளவருமான S.V.சுப்பையா மற்றும் பலரை கிராமங்களில் பாமர மக்களிடம் சென்று ராம நாமத்தை சொல்லி வர பணித்தார். மடத்தில் ராம நாமம் எழுதி கொடுத்தால், வெள்ளி காசு கொடுத்தார். திருப்பாவை, திருவெம்பாவையை வெளியில் கொண்டுவந்து ஒவ்வொரு கோவிலிலும் மார்கழி மாதத்தில்



இசைக்க செய்தார். இவையெல்லாம் பெரிதாக பிரச்சாரத்திற்கு பின்னாளில் வரவில்லை. பகவன்நாம போதேந்திராள், மஹாஸ்வாமிகள், ஸ்ரீஸ்ரீஅண்ணா எல்லோரும் இதற்காகத்தான் கவலைப்பட்டார்கள். ராமகிருஷ்ணர், "பலர் கூடி ஒரு இடத்தில் பிரார்த்தனை செய்தால் அதற்கு விசேஷ சக்தி உண்டு" என்று அடிக்கடி சொல்வார்".

மேற்கண்டவாறெல்லாம், தமது உள்ளக்கிடக்கையை ஸ்ரீஸ்வாமிஜி பகிர்ந்து கொண்டார்கள். இப்படி அவர் பேசுவது பலிதமாவதை நாம்தான் பார்த்து வருகிறோமே? அப்படியே, மறுநாளே, முதல் MASSPRAYER தூத்துக்குடியில் நடந்தது. பின்னர், சென்னை காமராஜர் அரங்கத்தில் ஜனவரி1, 2007 அன்று, மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை பல ஆயிரக்கணக்கான அன்பர்கள் கலந்து கொள்ள நடைபெற்றது. இப்படி துவங்கிய இந்த மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை, தமிழ்நாட்டில் கிராமங்களிலும், நகரங்களிலும், இதர மாநிலங்களிலும், ஏன் இந்தியாவையும் தாண்டி பிற நாடுகளிலும் ஒரு கம்பீரமான அலை போன்று கிளம்பி செல்வதை பார்த்து வருகிறோம்.

சென்ற மாதம் அம்பாசமுத்திரம், தூத்துக்குடி, சிவகாசி, கோவில்பட்டி, விருதுநகர், கல்லிடைக்குறிச்சி, பெரியகுளம், மதுரை, திருச்சி, திருப்பூர், உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் நடந்தது. எல்லா ஊர்களிலும் 2500க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டார்கள். ஸ்ரீவாரி டிரஸ்ட் என்ற டிரஸ்டின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திருப்பூர் MASSPRAYER அன்று சற்றேறக்குறைய 10000பக்தர்கள் கலந்து கொண்டனர். மாலை 4.30க்கு ஆரம்பித்த MASSPRAYER இரவு 8.30க்கு முடிந்தது. ஸ்ரீஸ்வாமிஜியும் நான்கு மணிநேரம் NON-STOP ஆக நாமத்தின் பெருமையை பல அற்புதங்களுடன் எடுத்து எடுத்து பேசினார். ஸ்ரீஸ்வாமிஜி நான்கு மணிநேரம் தொடர்ந்து பேசியது பெரிய விஷயமல்ல. கூடியிருந்த பக்தர்கள் நான்கு மணிநேரமும் கலையாமல் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள். எல்லோருக்கும் பிரசாதமும் (உணவும்) அளிக்கப்பட்டது.



## ஒரு சாதகரின் டைரிக்குறிப்பு - 5

என்னுடைய நண்பர் ஒருவர் உடலை அப்படி பார்த்து கொள்வார். பார்ப்பதற்கு அழகாக இருப்பார். ஆரோக்கியமாகவும் இருப்பார். ஆரோக்கியமான பழக்க வழக்கங்களையும் உடையவர். அவருக்கு வியாதியே வந்தது கிடையாது. ஒருநாள் கூட மருத்துவமனையில் சேர்ந்து படுத்தது கிடையாது. ரத்தகொதிப்பு, சர்க்கரை நோய் (B.P., DIABETES) போன்ற எந்த பரம்பரை வியாதியும் கிடையாது. எல்லோரிடமும் நன்றாக கலகலப்பாக பழகுவார். பார்ப்பதற்கு எல்லாவிதத்திலும் Fitஆக இருப்பார். ஒருநாள் அவர் இறந்து விட்டதாக செய்தி எனக்கு வந்தது. என்னால் அதை நம்பவே முடியவில்லை. அப்பொழுது அவருக்கு வயது நாற்பத்தி எட்டு. சிலமாதங்கள் கழித்து அவருடைய வீட்டில் அவர் தந்தையை தற்செயலாக சந்தித்தேன். அப்பொழுது அவர் அழுதுகொண்டே தன்னுடைய பல வருடங்களுக்கு முன்பான ஒரு டயரியை எடுத்துக்கொண்டு வந்து காண்பித்தார்.

அவர்கள் குடும்பத்திற்கு ஒரு குறி சொல்பவர் (SOOTHSAYER) போல் ஒருவர் இருந்து வந்திருக்கின்றார். அவர் அவ்வப்பொழுது சொன்னவற்றையெல்லாம் எழுதி வைத்திருந்தார். அதில் அவருடைய மகன் நாற்பத்தெட்டு வயதில் திடீரென்று மரணம் அடைவான் என்று அவர் கூறியதையும் எழுதி வைத்திருந்தார். என்றோ அவர் விளையாட்டாக கூறியது இன்று நடந்து விட்டது. ஒருவர் ஆரோக்கியத்துடன் இருக்கிறாரோ, அல்லது ஆரோக்கியமில்லாமல் இருக்கின்றாரோ அவரவருக்கு இவ்வளவுதான் ஆயுள். என்று இறைவன் போட்ட கணக்குப்படிதான் அது நடக்கும் என்பதை இந்த சம்பவம் என் மனதில் நன்றாக ஊர்ஜிதம் செய்து விட்டது.

(தொடரும்)





## பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

**கேள்வி: யோக பயிற்சியினால் ப்ராணன் அடங்குகின்றது. உடலில் உள்ள யோக சக்கரங்கள் வழியாக ஸுஷும்னா கிளம்புகின்றது. அந்த அந்த சக்கரங்களில் விழிப்பு ஏற்பட்டு தலையில் உள்ள ஸஹஸ்ராரத்தை சென்று அடையும்பொழுது ஞானம் ஏற்படுகின்றது. அதுபோல் ஞான மார்க்கத்தில், மனதில் உள்ள வாசனைகளின் க்ஷயம் (அழிவு) ஏற்பட்டு, ஞானம் ஏற்படுகின்றது. த்யானத்தினால் அலைபாயும் மனது ஒரு நிலைப்படுகின்றது. இவைகளை ஓரளவிற்காவது நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. அப்படி இருக்க, நாமகீர்த்தனத்தால் நினைத்தது எல்லாம் நடக்கும் என்றால் அது எப்படி?**

**பதில்:** நடக்கின்ற எல்லா செயல்களும் நம்முடைய யுக்திக்கு பொருந்தித்தான் ஆக வேண்டும் என்ற அவசியம் இல்லை. நம்முடைய யுக்திக்கு பொருந்தாத எவ்வளவோ விஷயங்களும் இயற்கையில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றை பார்ப்போமா? பூக்களிலேயே மிகவும் அழகானது தாமரை, ம்ருதுவானது. அதன் வாசனையே மிகவும் அலாதி; தெய்வீகமானதும் கூட. பகவானுடைய கண்கள், பாதங்கள், நாபி, திருவடிகள் எல்லாம் தாமரையுடன்தான் ஒப்பிடப்படுகின்றது. அப்படிப்பட்ட தாமரைக்கு மட்டும் ஒரு விசேஷம் உண்டு. என்ன அது தெரியுமா? அது மிகவும் குளுமையானது. நமது கண்களில் நன்றாக மலர்ந்த தாமரையை விரித்து வைத்துக்கொண்டால், அதன் குளிர்ச்சி தெரியவரும். ஆனால், இவ்வளவு குளிர்ச்சியான தாமரை மட்டும் இரவில் மலர்வதில்லை. உஷ்ணமான சூரியனை கண்டு தான் மலர்கின்றது. என்ன விந்தை! இது எப்படி என்ற கேள்வி எழுந்தால் நம் அறிவு என்ன பதில் வைத்துள்ளது?அதுபோல்தான் நாமகீர்த்தனமும். இதன் பெருமை யுக்தியினால் அறிய முடியாதது.

**கேள்வி : ஸ்ரீமத்ராமாயணம், ஸ்ரீமத்பாகவதம் எல்லாம் பாராயணம் செய்து வருகின்றேன். மேலும் நான் என்ன செய்ய வேண்டும்?**



**பதில்:** ராமாயணத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் ராமருடைய தெய்வீகமான குணங்கள் பரிமளிக்கின்றது. ஸ்ரீமத்பாகவதத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் பகவானுடைய மஹிமை வெளிப்படுகின்றது. ராமருடைய குணங்களில் மிகவும் Simple ஆன பொய் பேசாமல் இருப்பது, தாய் தந்தையை மதிப்பது போன்றவைகளை கூட நம்மால் பின்பற்ற முடியாது. ஆனால் நிச்சயமாக ஒன்று நம்மால் முடியும். "ராமா" என்று சொல்ல முடியும். அன்று ஒரு அஹல்யயை கரையேற்ற ராமரே நேரில் வந்தார். ஆனால் அஹல்யயை விட மோசமாக இருக்கும் என் போன்றவர்களுக்கு அவருடைய நாமமே போதுமானதாக உள்ளது. அதுபோல், பகவான் க்ருஷ்ணனின் மஹிமைகளில் நம்மால் எதை பின்பற்ற முடியும்? ஆனால், "க்ருஷ்ணா" என்று நிச்சயமாக சொல்ல முடியும். இந்த இரண்டு அவதாரங்களில் நாமத்தையும் தன்னிடத்தே கொண்டதுதான் மஹாமந்திரம். இதை தொடர்ந்து சொல்லி வந்தாலே போதும்.

**கேள்வி: பிரும்மசூத்திரம் படிப்பவர்களுக்கே எல்லா குழப்பங்களும் போய் அமைதி ஏற்படுகின்றது. அப்படியிருக்க பிரம்மசூத்திரத்தை எழுதிய வ்யாஸருக்கே குழப்பம் வந்தது என்று ஸ்ரீமத்பாகவதத்தில் சொல்லியிருப்பதை சுட்டி காட்டி அதை அர்த்தவாதம் என்கின்றார் ஒருவர்.**

**பதில்:** பாகவதத்தை நன்றாக படிக்க வேண்டும். மன சாந்தியுடன் இருந்த வ்யாஸர் வரக்கூடிய யுகமான கலியுகத்தில் நடக்கவிருப்பதை தன்னுடைய ஞான த்ருஷ்டியினால் பார்த்தார். அதில் உங்களிடம் கேள்வி கேட்டாரே ஒருத்தர், அவரையும் பார்த்துவிட்டார். கலியில் மந்த புத்தி உள்ளவர்கள் பலர் இப்படித்தான் தப்பும் தவறுமாக ஏதாவது உளறுகிறார்களே என்று கவலைப்பட்டுத்தான் ஸ்ரீமத்பாகவதமே செய்தார். ஸ்வயம் நாராயணனான அவருக்கு தான் பிரத்யேகமாக கலியுகத்திற்கு செய்ய வேண்டிய ஒரு காரியத்தை பற்றி கவலை ஏற்பட்டதே தவிர அவருடைய பரிபக்குவத்தை நினைத்து அல்ல.



ஸ்ரீமத்பாகவதத்தையும், பகவந்நாமத்தையும் எவர்கள் அர்த்தவாதம் என்று சொல்கின்றார்களோ, அவர்களை பார்த்தால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்ய வேண்டும்.

**கேள்வி: யம நியமம் போன்ற எட்டு அங்கங்களை யோகசூத்திரங்கள் கூறுகின்றனவே. நாமகீர்த்தனம் செய்பவர்களும் இவைகளை கை கொள்ள வேண்டுமா?**

**பதில்:** அவசியமில்லை. அஷ்டாங்க யோகத்தில் அவைகள் கூறப்பட்டுள்ளன. நாமகீர்த்தனம் செய்பவர்கள் சிரவணம், கீர்த்தனம், விஷ்ணோ: ஸ்மரணம், பாதசேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சக்யம், ஆத்மநிவேதனம் என்ற ஒன்பது விதமான பக்தி ஸாதனங்களை கைக்கொண்டாலே போதும்.

**கேள்வி: எனது நண்பர் ஒருவர், சங்கரர் வேதாந்தத்தைத்தான் சொல்லியுள்ளார்; நாமகீர்த்தனத்தையெல்லாம் சொல்லவில்லை என்கின்றார்.**

**பதில்:** சங்கரர் வேதாந்தத்தை ஊர் ஊராக போய் மேடைபோட்டு பாஷ்யங்களை பண்ண சொன்னாராக்கும்! வேதாந்தத்தை போதிக்கும் முன் அதற்கு யார் அதிகாரி என்றும் சொல்கின்றார். அதை இவர்கள் சொல்லமாட்டார்கள். ஏன் என்றால் அப்படி சொன்னால், சொல்லுபவரே அதற்கு அதிகாரி இல்லை என்று ஆகிவிடுவார்கள்!

**கேள்வி: ஜீவன்முக்தர்களான மஹான்கள் நம்முடைய பார்வையில் எவ்வளவோ உலக விஷயங்களில் ஈடுபடுகின்றார்களே. அது அவர்களை ஒட்டாதா?**

**பதில்:** நாமும் பக்தி, பஜனை, பாராயணம் , ஹோமம், ஜபம் என்று எவ்வளவோ தெய்வீக காரியங்களில் மனது ஈடுபடவேண்டும் என்று எவ்வளவோ பிரயத்தனப்பட்டு ஈடுபடுகின்றோம். ஆனால், பிறந்ததிலிருந்து செய்து வந்த இவைகள் ஏதாவது நம்மிடம் ஒட்டுகின்றதா? அதுபோல்தான் இதுவும். நாம் எவ்வளவு பிரயத்தனப்பட்டாலும் அக்ஞானத்தில் ஞானம் ஒட்டாது. அவர்கள் எவ்வளவு பிரயத்தனப்பட்டாலும் ஞானத்தில் அக்ஞானம் ஒட்டாது.

## ஸ்ரீராமானுஜம் அவர்களின் சத்சங்கங்கள்

*அக்டோபர் 1ம் தேதி- ஸ்ரீராமானுஜம்* **'Happiness at Work' and 'Ethics'** *என்ற தலைப்பில்* **ICSI-CCGRT** *நிறுவனத்தில் பேசினார். இது மிகவும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது.*

**மும்பை சத்சங்கங்கள்** *- அக்டோபர் 10விருந்து 16வரை மும்பை பாரதீய வித்யாபவனில் ஸ்ரீராமானுஜம் அவர்கள்* **Ancient Wisdom for Modern Times** *என்ற தலைப்பில்* **ஸ்ரீமத்பாகவதம்** *பற்றி மிக அழகாக ஆங்கிலத்தில் பேசினார். இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை GOD INDIAவை சார்ந்த ஸ்ரீநடராஜன், ஸ்ரீமதிசரஸ்வதி மற்றும் ஸ்ரீபிரசாத் ஆகியோர் மிக நேர்த்தியாக செய்திருந்தனர். மேலும் பல இடங்களில் ஸ்ரீராமானுஜம் மஹாமந்திரம், பாகவதம், குருமஹிமை தலைப்புகளில் சத்சங்கம் நிகழ்த்தினார்கள்.*








## *சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**அக்டோபர் 3 - ஸ்ரீஅப்பைய்ய தீக்ஷிதர்** ஜெயந்தி விழா, மயிலை சாஸ்திரி ஹாலில் நடைபெற்றது. இதில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டு அப்பைய்ய தீக்ஷிதர் வரலாற்று நூலை வெளியிட்டார்கள். இதன் முதல் பிரதியை, திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம நிர்வாகி ஜஸ்டிஸ் ஸ்ரீஅருணாசலம் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். பல வித்வான்களும், அப்பைய்ய தீக்ஷிதர் நூல்கள் பற்றி சிறப்பாக பேசிய இவ்விழாவில், நிறைவாய் ஸ்ரீஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள்.

**செப்டம்பர் மற்றும் அக்டோபர் - மதுரமான மஹனீயரில்** உள்ளபடி தூத்துக்குடி, உசிலம்பட்டி, பெரியகுளம், சிவகாசி, கோவில்பட்டி, மதுரை, விருதுநகர், திருச்சி, உடுமலைப்பேட்டை, திருப்பூர், ராணிப்பேட்டை, வேலூர் மற்றும் பல இடங்களில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. இது தவிர பல பள்ளிகளிலும், தொழில்நிறுவனங்களிலும் ஸ்ரீஸ்வாமிஜி மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை மற்றும் சத்சங்கங்களை நிகழ்த்தினார்கள்.


**அக்டோபர்17** அன்று **சென்னை ப்ரேமிக பவனம் ஸ்ரீனிவாசபெருமாளின் அவதார உத்ஸவம்** விஜயதசமியன்று மிக சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை11மணி அளவில் ஸ்ரீஅண்ணாதுரை ஸ்ரீமதி சரோஜா தம்பதியினரின் **"ஸ்ரீமதிசரோஜா ஸதனம்"** இல்லம் நாமத்வாருக்காக அர்ப்பணிக்கப்பட்டது. பம்மல் பாலாஜி அவர்கள் மிக அழகாக நாமத்வார் மற்றும் மஹாமந்திரத்தின் அவசியத்தை எடுத்துரைத்து பேசினார்கள். வந்திருந்தோருக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

**அக்டோபர் 22 -** சென்னை **உள்ளகரம்** SRK **ஹாலில் நடைபெற்ற பாகவத மேளாவை** ஸ்ரீஸ்வாமிஜி துவக்கி வைத்து அருளுரை வழங்கினார்கள். மிக சிறப்பாக இது நடைபெற்றது. அன்றே பெங்களூர் மல்லேஸ்வரத்தில் நடந்த வால்மீகி ஜெயந்தி விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.



## *ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்*

*- ஜனனி*



### *ஸ்வாமி க்ருஷ்ணானந்தஜி-2*

பத்து வருடங்கள் அந்த மடத்தில் தங்கி ஸம்ஸ்கிருத வியாகரணம், ந்யாஸம், மீமாம்ஸை, சங்கர வேதாந்தம் போன்றவற்றை கற்ற ஸ்வாமி கிருஷ்ணானந்தாஜியிடமே மடத்தின் அனைத்து பொறுப்புகளையும் ஒப்படைத்து விடுவதாக அம்மடாதிபதி முடிவு செய்திருந்தார். அதற்கான நல்ல நேரத்தை எதிர்பார்த்து கொண்டிருந்தார்.

ஏற்கனவே உலக வாழ்வை உதறி விட்டு பிருந்தாவனம் வந்தவரான ஸ்வாமி கிருஷ்ணானந்தாஜி தம் வாழ்க்கையில் மீண்டும் ஒரு முக்கிய முடிவெடுக்க வேண்டியவரானார். ஒரு மடாதிபதியாக குதிரை,யானை, வேலையாட்கள், தங்கம், வெள்ளி, குடை, சிம்மாசனம் என்ற வைபவமான வாழ்க்கையை தேர்ந்தெடுப்பதா அல்லது ஒரு விரக்த ஸந்யாஸியின் கடுமையான வாழ்க்கையை தேர்ந்தெடுப்பதா? இந்த ஒரு மனக்குழப்பத்தில் இருந்தபொழுது ஒருநாள் பாதி தூக்க நிலையில் இருந்தார். தங்கநிறம் கொண்ட பாலகன் அவர் முன் தோன்றி "நீ உன் நன்மையை விரும்பினால் இவ்விடத்தை விட்டு சென்று விடு" என்று கூறி மறைந்து விட்டான்.

மறுநாள் காலையே, அவர் தண்டகமண்டலங்களுடன் மடத்திலிருந்து கிளம்பிவிட்டார். கங்கையில் ஸ்நானம் செய்து விஸ்வநாதரை தரிசனம் செய்து விட்டு, கங்கை கரை ஓரமாகவே மேற்கு திசையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். இரண்டரை வருடங்கள் கங்கை அருகாமையிலேயே சுற்றி கொண்டிருந்தார். தினம் ஒருவேளை மட்டும், ஏதாவது கிராமத்தில் பிக்ஷை பெற்றுக்கொள்வார். வழியில் கிராமம் எதுவும் வரவில்லையென்றால் கங்கை ஜலத்தை மட்டுமே பருகி இருப்பார். எப்பொழுதும் மௌனத்திலேயே இருப்பார். அத்யாவஸ்யமாக



இருந்தால் மட்டுமே கொஞ்சமாக பேசுவார். இக்காலத்தில் அவர் பல சாதுக்களையும் சந்தித்தார். அவர்கள் கூறிய முறையில் தியானம், பிராணாயாமாதிகளை செய்த போதிலும், அவருக்கு ஏனோ மனதில் சாந்தி ஏற்படவில்லை. கடைசியில், நடந்து நடந்து, அவர் அனூப்ஸஹர் என்னும் இடத்திற்கு வந்தார். அங்கே ஒரு படகில் அச்சுத முனி என்பவர் வசித்து வந்தார். அவர் அனுபூதி பெற்ற ஒரு மஹான் மற்றும் வித்வான். அவருடைய தரிசனமும், உபதேசமும் ஸ்வாமி கிருஷ்ணானந்தருக்கு சற்று சாந்தியை அளித்தது. இவருடைய ரஸிக ஹிருதயத்தையும், பாவத்தையும் பார்த்த அந்த அச்சுத முனி, அவரை பிருந்தாவனம் சென்று, வ்ரஜத்தில் வசித்துக்கொண்டே, பஜனை செய்யுமாறு உபதேசித்தார்.

(தொடரும்)

### சனாதனப் புதிர் - பகுதி - 21

( விடைகள் அடுத்த இதழில்)
–ஆத்ரேயன்

1. திவ்ய பிரபந்தம் எத்தனை பாசுரங்கள்? எத்தனை பிரபந்தங்கள்? மிக அதிகமாக பாசுரங்களை இயற்றியது யார்?
2. துந்துபியின் பெற்றோர்கள் யார்? இவனுடைய சகோதரி, சகோதரன் யார்? யாரால் கொல்லப்பட்டான்?
3. திவ்ய திருஷ்டி யாருக்கு, எப்பொழுது கிடைத்தது?
4. காந்தார தேசத்து அரசனான ஸுபலனுக்கு எத்தனை பெண்கள்? இவர்கள் யாரை மணந்தார்கள்?
5. நாம் உட்கொள்ளும் உணவு, எப்படி இருக்க வேண்டும் என்பதை ஸ்ருதிகளில் எங்கே காணலாம்?
6. அரசமரத்தை பற்றிய குறிப்புகள் எங்கே காணப்படுகின்றன?
7. பவதாரிணி என்று எந்த தெய்வத்தை சொல்கிறார்கள்? அது எங்கே இருக்கிறது?
8. அன்னஸூக்தம் எங்கே காணப்படுகிறது? இந்த ஸூக்தத்தின் ரிஷி, சந்தஸ், தேவதை என்ன?
9. விஷ்ணு, கிருஷ்ணர் இவர்கள் அணிந்துள்ள மாலையின் பெயர் என்ன?
10. வாமதேவருக்கு பிரம்மஞானம் எப்பொழுது கிடைத்தது?



## *மாலே மணிவண்ணா – 89*

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

வேதமுதல்வனாகிய தீதற விளங்கிய திகிரியோன் ஆகிய திருமாலை, பரிபாடல் எட்டுப்பாடல்களாக தோத்திரம் செய்கிறது. எட்டுப்பாடல்களுள் தற்போது நமக்கு கிடைத்துள்ளவை நூலில் ஆறு பாடல்களாகும். பரிபாடல் நூலின் தொடக்கமே, திருமால் பற்றியுள்ள பாடல்களாக தொடங்கி அமைகிறது. அத்தொடர்ச்சியில் முதல் நான்கு பாடல்கள் தொடர்ச்சியாக அமைந்தவை. அவற்றை இதுகாறும் அறிந்தோம். இனி நூலுள் பதின்மூன்றாம் பாடலாக அமைந்துள்ளதும், திருமாலைப்பற்றிய ஐந்தாவது பாடலாக உள்ளதும் ஆகிய பாடலை அறியலாம்.

கடவுள் வாழ்த்தாக நல்லெழுநியார் என்னும் சங்கப்புலவர் பாடிய பாடல் இது. இசைவகுத்தார் பெயர் தெரியவில்லை. பண் நோ்திறம் ஆயினும், நோதிறம் என்றே சுவடிகளில் உள்ளது. இனி பாடலை சுவைப்போம்.

திருமாலை வணங்குவார் பெரும்பேற்றை முதலில் கூறுகிறார். எடுத்த எடுப்பிலேயே பெருமாள் அழகில் நெஞ்சு பறிகொடுத்து நிற்கிறார் ஆசிரியர். நாமும் அந்த திருமால் தரிசனத்தில் ஈடுபடலாமே!

நீலமணி போன்ற மலை. அம்மலை மேல் ஊர்ந்து வருகிற காலைச்சூரியன். அந்தக்காலை இளஞ்சூரியனின் அழகுபொருந்திய பீதாம்பரத்தை அணிந்திருக்கிறார் எம்பெருமான். அந்தக்காலை சூரியன் போலக்கதிரொளியில் இருக்கும் அழகமைந்த முடியை உடையவராக இருக்கிறார்.

மணிவரை ஊர்ந்த மங்குல் ஞாயிற்று

அணிவைப்பு அமைந்த பூந்துகில், புனைமுடி

மங்குல் என்றால் இருள். மங்குல் ஞாயிறு என்றால், இருள் சூரியன்



என்றாகும். இங்கே இருளை கெடுக்கும் சூரியன் என்று பொருள் செய்ய வேண்டும் என்று உரையாசிரியர் பரிமேலழகர் விளக்கம் தருகிறார். அதற்கு ஒரு உதாரணமும் காட்டுகிறார். "நோய்மருந்து" என்றால் நோயை நீக்கும் மருந்து என்று பொருள் செய்வதை போல இருளை கெடுக்கும் காலை ஞாயிற்றை என்று பொருள் கொள்கிறார் - எத்தகைய அரிய உரை! (தொடரும்)

### சனாதனப் புதிர் : பகுதி – 20 விடைகள்

–ஆத்ரேயன்



1. யார் என்று தெரியவில்லை. 1355 ஸ்லோகங்கள். 27 ஸர்க்கங்கள். சீதா ஸஹஸ்ரநாமம் 25ஆவது ஸர்க்கத்தில் காணப்படுகிறது.
2. அத்யாத்ம ராமாயணத்தில் ராவணன் பஞ்சவடியில் சீதையை எடுத்து செல்வதில் இருந்து அக்னிபிரவேசம் வரை மாயாசீதை. 4200 ஸ்லோகங்கள்; 65 ஸர்க்கங்கள். ராம கீதை, ராம ஹ்ருதயம் இதில் காணப்படுகின்றன. இதைத் தழுவி ஸ்ரீதுளசிதாஸர் "ராமசரித மானஸ்" எழுதினார். இதை சிலர் ப்ரஹ்மாண்ட புராணத்தின் ஒரு பகுதி என்றும் சொல்கிறார்கள்.
3. காளி, தாரா, ஷோடஸி திரிபுரசுந்தரி, புவனேஸ்வரி, சின்னமஸ்தா, திரிபுரபைரவி, தூமாவதி, பகலாமுகி, மாதங்கி, கமலாத்மிகா – இவைகள் சாக்த தாந்திரீக பூஜைகள் .
4. பெண்களில் உபநயனம் அணிந்து வேதம் பயின்று, ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள். மைத்ரேயி- ப்ரஹ்மவாதினி (ப்ருஹதாரண்ய உபநிஷத் 4.5.1) ரிக் வேதம் 27 ப்ரஹ்மவாதினிகளை பற்றி கூறுகிறது.
5. பிறந்தது; உண்மையை உணர்ந்தது, உடலை விட்டது – ஆகிய மூன்றும் வைசாக பௌர்ணமியில் நடந்தது. இதை மூன்று முறை ஆசீர்வதிக்கப்பட்ட தினமாக பௌத்தர்கள் கருதுகிறார்கள்.
6. மூல சங்கரன், தந்தை அம்பாசங்கர் திவாரி; தாய் – அம்ருத்பாய்; குஜராத்தில் உள்ள மோர்வி ஜில்லாவை சேர்ந்தவர். 1825 முதல் 1883 வரை– ஆர்ய ஸமாஜ் என்ற இயக்கத்தை 1875இல் ஆரம்பித்தார்.
7. இவர்கள் கடவுள், ஆத்மா, மோக்ஷம், பிறவி, தர்மம் இவைகளை ஏற்பது இல்லை. கண்களுக்கு பிரத்யக்ஷமாக எது தெரிகிறதோ அதை ஏற்கிறார்கள்.
8. சபர்மதி நதி கடலில் கலக்கும் இடம். பத்ம புராணம் – மஹாபாரதம் – சல்யபர்வா – அத்தியாயம் 49– இதைப் பற்றி குறிப்பிடுகிறது.
9. சிவபெருமானை முக்கியமாக தரிசிக்க வேண்டிய மூன்று இடங்கள் காசி, ராமேஸ்வரம், கோகர்ணம் (இது கர்நாடகாவில் இருக்கிறது).
10. கௌடில்யர் என்ற சாணக்கியர் (321–30) சமர்த்த ராமதாஸர்(1608–1681) . வித்யாரண்யர் (1296–1386)



## *அக்ஷரமணமாலை* (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-173)

மொட்டையடித்தெனை வெட்டவெளியினீ
நட்டமாடினையென் னருணாசலா(85)

அஹங்காரமும் மமகாரமும் அழிந்தால் உடனே ஆன்ம சாக்ஷாத்காரம் ஏற்படும். சாதனையின் அளவிற்கேற்றவாறு வாசனைகள் அழிகின்றனவே தவிர, ஆன்மானுபவம் என்பது பின்னமாக(சிறிது சிறிதாக) ஏற்படுவதில்லை. தீக்குச்சியானது தீப்பெட்டியில் உரசினால் நெருப்பு பற்றி கொள்கிறது. பலமுறை உரசி, பற்றவில்லையெனினும், ஏதோ ஒருமுறை பட்டென குச்சி நெருப்பை பற்றி கொள்கிறது. அதுபோல்தான் ஆன்மவிசாரம் என்னும் முயற்சியை சாதகர் செய்கிறார். அப்படி செய்து வருகையில், ஒரேகணத்தில், ஆன்மானுபவம், ஈஸ்வர கிருபையினால் முழுவதுமாக ஏற்பட்டு விடுகிறது.

மொட்டையடித்து என்று இங்கு குறிப்பிடப்படுவது, அஹங்கார மமகாரங்கள் அழிவதுதான். மனமழிவதே மொட்டை என சொல்லப்படுகிறது. ஆன்ம ஸ்தானமாக வலது மார்பை பிரதானமாக குறிப்பிட்டாலும், ஆன்மா சரீரத்திற்குள் அடங்கிய ஒன்று இல்லை. அது உண்மையில் ஸர்வ இடத்திலும் வியாபித்து இருக்கிறது. அதனாலேயே அது வெட்டவெளி என குறிப்பிடப்படுகிறது. வெட்டவெளி என்பது ஆன்மானுபவத்தை குறிக்கிறது. ஆன்மா ஸர்வவியாபியாக இருப்பதால், அதனனுபவம் பெற்றவர் எங்கு நடப்பதையும் இயல்பாகவே அறிந்தவராய் உள்ளனர். இப்படி, எங்குமிருக்கும் ஒன்றிற்கு ஜாதியும் பேதமும் இல்லை. நாம்தான் ஞானி இவ்வாறெல்லாம் காரியங்களை செய்கிறார் என்கிறோமே அன்றி, அவர் உண்மையில் இருப்பது ஒரே அனுபவத்தில்தான்.

மனம் அப்யாசத்திற்குத்தான் அடங்கும். கட்டளைக்கு அடிபணியாது. இனிப்பு தவிர்ப்பது ஒருவருக்கு அவசியம் எனின், இனிப்பு பண்டத்திலிருந்து சிலகாலம் விவேகத்தினால் விலகி இருந்தால், மனம் பழக்கப்பட்டு விடும். ஆன்மவிசாரத்தில், ஆரம்பத்தில் முயற்சியினால் எண்ணங்கள் அடங்கும். அப்யாசத்தினால் சித்தித்து விட்டால், எண்ணங்கள் தாமாக எழுந்து அடங்குவது தெரியும். இப்படி ஏற்பட்ட பிறகு ஒவ்வொரு எண்ணமாய் அழிய ஆரம்பிக்கிறது. அப்படியே கடைசி எண்ணமும் அழிந்து ஆனந்த நிலை சித்திக்கிறது. நட்டம் என்றால் நடனம். ஆன்மானுபவம் பெற்ற மஹனீயர்களுக்கு ஆனந்தம் உள்ளே பொங்குவதால் ஆனந்த நடனமிடுகிறார்களாம். அவர்களுள் ஆனந்தம் நடனமிடுவதுதான் இப்படி குறிப்பிடப்படுகிறது. அப்படி ஒரு அருளை அருணாசலேச்வரன் தனக்கு செய்தான் என ரமண மஹரிஷிகள் குறிப்பிடுகிறார்.

(தொடரும்)



வாலாஜாவை சேர்ந்த திரு.பழனி அவர்கள் நமது ஸ்ரீஸ்வாமிஜியிடம் மிகவும் அன்பு பூண்டவர். மஹாமந்திரப்பணியில் மிகவும் ஈடுபட்டவர். அவர் அக்டோபர் மாதம் 5ஆம் தேதியன்று பகவானின் திருவடிகளை அடைந்தார். வாலாஜாவில் தற்பொழுது அவரது புதல்வர் திரு.செந்தில் நாமப்பணிகளை கவனித்து வருகிறார்.




மதுரமுரளி சந்தாதாரர்கள் ஆக விரும்புகிறவர்கள்
Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue , Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/ டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875




Madhuramurali
- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.


### ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| அக்- 23, 24 | கூட்டுபிரார்த்தனை-ராணிப்பேட்டை, வேலூர் |
| அக்-28 | சாந்தீபனி குருகுல பாடசாலை,பூமி பூஜை - ஹைதராபாத் |
| நவ-2,17 | ஏகாதசி |
| நவ 5 | ஸ்ரீஸ்வாமிஜியின் பாடல்கள் பஜனை - நாரதகான சபா |
| நவ 6 | ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திரம் |
| நவ 7 | வானமாமலை |
| நவ 14 | ஆம்பூர் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை |
| நவ 8-15 | சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீமத்பாகவதம் |
| நவ 28 | திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம் - ராமாயணம் ஆரம்பம் |
| டிச 19 | பெங்களூர் கல்கரே கிராம சுந்தர ஆஞ்சநேயர் ஜெயந்தி |


ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.






## அப்பாலுக்கு அப்பால் –
## ஸ்ரீஸத்குருநாதரை பற்றி மதுரஸ்மரணம்

சென்ற வருடம் சென்னை பிரேமிகபவனத்தில் ஸத்குருநாதர் பற்றி "மதுரஸ்மரணம்" என்ற தலைப்பில் டாக்டர்.ஆ.பாக்யநாதன் அவர்கள் பேசி இருந்தார். இதை பலரும் விரும்பியதை ஒட்டி, ஸத்குருநாதரின் அருளாணைப்படி, சிங்கப்பூர் மற்றும் மலேசியாவிற்கு மதுரஸ்மரண சத்சங்களுக்காக சென்றிருந்தார். அப்பொழுது மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் ஒரு புதிய நாமத்வாரையும் திறந்து வைத்தார். கடந்த செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில். ஸத்குருநாதரின் அருளால், ஸ்ரீபாக்யநாதன் அவர்கள் ஆஸ்திரேலியா, இந்தோனேசியா மற்றும் மலேசிய நாடுகளில் சென்று சத்சங்கங்கள் நிகழ்த்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டது.

செப்டம்பர் 19 முதல் அக்டோபர் 11 வரை ஆஸ்திரேலியாவில் சிட்னி, மெல்போர்ன், அடிலைட் நகரங்களில் பல சத்சங்கங்கள் நடந்தன. அதில் குறிப்பாக ஸத்குருநாதரின் திவ்யசரித்திரத்தையும், ஸத்குருநாதர் ஆற்றி வரும் பணிகள் குறித்தும் சிட்னியில் ஒரு தொடராக டாக்டர்.பாக்யநாதன் பேசினார். இதில் திரளான அன்பர்கள் பங்கேற்று பெரும் பேறு பெற்றனர். இதில் குருநாதரின் ஜனனம், பால லீலைகள், தவ வாழ்க்கை, தலயாத்திரைகள், பக்தர்களின் வாழ்வில் அவர் நிகழ்த்திய லீலைகள், அவர் இயற்றிய கீர்த்தனங்கள் வெளி வந்த விதம் என அனைத்தையும் அழகாக பேசினார்.

ஆஸ்திரேலியாவில் இருமுறை வானொலியிலும் ஒருமுறை தொலைக்காட்சியிலும் ஸ்ரீபாக்யநாதன் அவர்களை பேட்டி கண்டனர். அவற்றில் ஸத்குருநாதரின் உபதேசங்கள், எப்படி தற்காலத்தில் இறைவனை அடைய வழிவகுக்கிறது என்பதை வானொலியில் ஸ்ரீபாக்யநாதன் தெளிவாக எடுத்து கூறினார். பலர் இப்பேட்டியை கேட்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சியில்



ஆஸ்திரேலிய வானொலியில் நம் ஸத்குருநாதர் அவர்களின் குரலில் அமைந்த மஹாமந்திர கீர்த்தனம், 15நிமிடங்களுக்கும் மேலாக ஒலிபரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்பேட்டியின் ஒரு பகுதி குருநாதரின் ஜெயந்தி தினமான தீபாவளியன்று, வாழ்த்து செய்தியாக ஆஸ்திரேலியர்களுக்கு மலர போகிறது.

அக்டோபர் 2 - மஹாத்மா காந்தி ஜெயந்தி அன்று. பெரிய அளவில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை, Sydney Paramatta டவுன் ஹாலில் ஏற்பாடாகி இருந்தது. மிகவும் நன்கு நடந்த இந்நிகழ்ச்சியில் ஆஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் Hon.MP Julie Owens (ஜூலி ஓவன்ஸ்), Hon.Councillor Glen Elmore (க்ளென் எல்மோர்), ராமகிருஷ்ணாமடம் ஸ்வாமி ஆத்மேஷானந்தா, பாரதீய வித்யாபவன் கம்பீர்வாட்ஸ் ஆகியோர் வந்திருந்தனர். உலகிற்கு மிகவும் அவசியமானதும், நம் ஸத்குருநாதர் ஸதா சொல்லி வருவதுமான உலகளாவிய சகோதரத்துவத்தையும் அதற்கு ஆன்மீக விழிப்பு அவசியம் என்பதையும் இதில் ஸ்ரீபாக்யநாதன் பேசினார். மேலும் இந்த ஆன்மீக விழிப்புணர்வு மலர மஹாமந்திர கீர்த்தனமே தற்காலத்திற்கு மிகவும் ஏற்றது என்ற ஸத்குருநாதரின் உபதேசமொழிகளையும் அவர் தெளிவாக எடுத்துரைத்தார். இப்பிரார்த்தனை கூட்டத்தில் மிக அதிகமாக ஆஸ்திரேலிய அன்பர்கள் வந்திருந்தனர். குருநாதரின் "எளிமையான வாழ்க்கை வேண்டும்" என்ற ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பாடல் பிரார்த்தனையாக இசைக்கப்பட்டது.

ஆஸ்திரேலியாவில் Ryde மருத்துவமனையில் மனஇறுக்கம் கொண்டோர்களுக்கு, எளியதோர் மஹாமந்திரத்தை அடிப்படையாக கொண்ட தியான பயிற்சியை, ஸ்ரீபாக்யநாதன் விளக்கி, செய்முறை விளக்கமும் கொடுத்தார்.

மேலும் பல இடங்களில் கலிதர்ம உந்தியார் வகுப்புகள், கோவில்கள் மற்றும் முதியோர் இல்லங்களில் சத்சங்கங்கள்,



பாலகர்களுக்கான கோபகுடீர முகாம்கள், இளைஞர்களுக்கான முகாம்கள் ஆகியன பல நடந்தது. டாக்டர்.பாக்யநாதனின் இந்த ஆஸ்திரேலிய பயணம் குருநாதரின் பெரும் கருணையால் மிக நன்றாக முடிந்தது. இந்நிகழ்ச்சிகளை GOD AUSTRALIA அன்பர்கள் ஸ்ரீரவி-சித்ரா, ஸ்ரீரமணன் -ஜெயந்தி, ஸ்ரீராமக்ருஷ்ணன் -ஜெயஸ்ரீ, ஸ்ரீமுத்து-வசந்தி, ஸ்ரீபாலா-மைதிலி, ஸ்ரீநாராயணன்-சரோஜா, ஸ்ரீகாமராஜ், ஸ்ரீராஜாராம்-உஷா, ஸ்ரீகாந்தன், ஸ்ரீதீபக்வினோத், ஸ்ரீசோமசேகர்-லக்ஷ்மி, ஸ்ரீராஜூ-புஷ்பா, ஸ்ரீரஜினி-ஷர்மிளா, ஸ்ரீபாஸ்கர்-கவிதா, ஸ்ரீமுரளி-அனிதா, ஸ்ரீதினேஷ், ஸ்ரீமகேஷ்-அபர்ணா, ஸ்ரீமதிவத்ஸலா, ஸ்ரீநரசிம்மன் -வைதேஹி மற்றும் பல அன்பர்கள் மிக அழகாக ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன் பின் இந்தோனேஷிய தலைநகரான ஜகார்தாவிற்கு, டாக்டர்.பாக்யநாதன் சென்றிருந்தார். அக்டோபர் 12-18 முதல் இங்கு சத்சங்கங்கள் இருந்தன. இங்கும் மதுரஸ்மரணமும் மஹாமந்திர கீர்த்தனம் மற்றும் கலிதர்ம உந்தியார் சத்சங்கங்களும் இருந்தது. ஸ்ரீபாக்யநாதன், மதுரஸ்மரண உரைகளில் , பக்தர்களின் வாழ்வில் ஸத்குருநாதர் நிகழ்த்திய லீலைகளை நினைவு கூர்ந்து, பகவானே எங்ஙனம் குரு வடிவு தாங்கி வந்து, நம்மை ரக்ஷிக்கிறார் என விரிவாக பேசினார். KARAWANG என்னுமிடத்தில் திரளான மாணவர்கள் முன்னிலையில் உலகளாவிய அன்பே உண்மையான ஆன்மீகம் என்று பேசினார். இந்தோனேசியாவில் பாலகர்களுக்கான கோபகுடீரம் நிகழ்ச்சி ஸ்ரீகோபால் அவர்கள் வீட்டில் பாகவத துதிகள், ஸத்குருநாதரின் பாடல்கள், நாமதேவர் நாடகம் என மிக அருமையாக நடந்தது. KELAPPAKADING என்ற இடத்தில் விஜயதசமியன்று திரளானோர் முன்னிலையில் ஒரு மஹாமந்திர சத்சங்கமும் மிக அழகாக நடந்தது. இவை GOD INDONESIA அன்பர்கள் ஸ்ரீகோபால்-மாலா, ஸ்ரீஅண்ணாமலை-மேகலா, ஸ்ரீசந்திரசேகர் தம்பதியினர், ஸ்ரீராமக்ருஷ்ணஹரி-பாரதி, ஸ்ரீராய்விஸ்வநாதன் தம்பதிகள் மற்றும் பக்தர்களின் முயற்சியாலும்



குருநாதரின் அருளாலும் மிக்க அழகாய் நடந்தது.

பின்னர் ஜகார்தாவிலிருந்து மலேசிய தலைநகர் கோலாலம்பூருக்கு ஸ்ரீபாக்யநாதன் சென்றிருந்தார். இங்கு ஸ்ரீமதிராஜேஸ்வரி, ஸ்ரீமதிசுனிதா, ஸ்ரீமதிபிரேமலதா, ஸ்ரீநாதன் ஆகியோர் அனைத்து ஏற்பாடுகளையும் மிக அழகாய் செய்திருந்தனர். மலேசியா கோலாலம்பூர் நாமத்வாரில் மதுரஸ்மரணமும் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையும் டாக்டர் பாக்யநாதன் அவர்கள் நிகழ்த்தினார். இதில் பல அன்பர்கள் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்து பயனுற்றனர். CastleField மற்றும் Ladang Seaport பள்ளிகளில் மஹாமந்திரகூட்டு பிரார்த்தனை மிக சிறப்பாக நடந்தது. கோலாலம்பூரில் மனஉளைச்சலை தவிர்க்க உதவும் Mahamanthra Meditation Workshop, "Gateway to Happiness" என்ற தலைப்பில் டாக்டர் பாக்யநாதன் அவர்களால் நடத்தப்பெற்றது. மிக ஆர்வமாய் பலர் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் மஹாமந்திரத்தின் மூலம் தியானம் செய்வதையும், அதனால் மன அழுத்தம் விலகுவதையும் தெளிவாக ஸ்ரீபாக்யநாதன் எடுத்து உரைத்தார். வந்திருந்தவர்கள் மிகவும் பயனடைந்தனர் என்பது தெளிவாக தெரிந்தது.

அனைத்து நிகழ்ச்சிகளையும் GODIVINITY ஆஸ்திரேலிய, இந்தோனேஷிய, மலேசிய அன்பர்கள் மிக மிக சிறப்பாகவும், நேர்த்தியாகவும், குருபக்தியோடும், மிக்க சிரத்தையோடும் செய்திருந்தது கண்கூடாக தெரிந்தது.

இப்படியாக ஸத்குருநாதனின் அபார கருணையாலும், சங்கற்பத்தினாலும், மூன்று நாடுகளில், மதுரஸ்மரணம், மஹாமந்திர நாமகீர்த்தன மஹிமை, குரு மஹிமை, ஸ்ரீமத்பாகவத தர்மம் ஆகியன குறித்த சத்சங்கங்களும், மஹாமந்திர பிரார்த்தனை கூட்டங்களும் அழகாக நடந்து முடிந்தது.

ஸத்குருநாத மஹாராஜ் கீ ஜெய்!



செப்டம்பர்22 – அகண்டமாய் மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்று வரும் **கோவிந்தபுரம் சைதன்ய குடீரம் இரண்டாம் வருட ப்ரதிஷ்டா தின வைபவம்** சிறப்பாக நடந்தது. ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்கள் விஜயம் செய்து அனுக்ரஹபாஷனம் வழங்கினார்கள். மாலை மஹாமந்திர நகரசங்கீர்த்தனம் நடைபெற்றது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு நாமகீர்த்தனம் செய்தார்கள்.






## பாலகர்களுக்கு ஒரு கதை



**சரியான கல்வி எது?**

சமுதாயத்தில், உயர்ந்த பொறுப்பில் இருக்கும் ஒருவரை பேட்டி கண்டார்கள். அப்பொழுது அவரிடம், தங்கள் முன், "இறைவன் வந்தால் என்ன வரம் கேட்பீர்கள்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் சொன்ன பதில், அர்த்தமுள்ளதாக இருந்தது. அப்படி என்ன சொன்னார்? இறைவனிடம், "என்னை மீண்டும் சிறுவனாக ஆக்கி விடு" என்று கேட்பேன் என்றார். பேட்டி கண்டவர், "தாங்கள் ஏன் அப்படி கேட்பீர்கள்" என்றார். அதற்கு அந்த பெரியவர், "நான் எனது கடந்த கால வாழ்க்கையில் தேவையில்லாத பல செயல்களை செய்திருக்கின்றேன். செய்யவேண்டிய செயல்கள் பலவற்றை செய்யாமல் விட்டிருக்கின்றேன். இன்னும் எவ்வளவோ கற்று கொண்டிருக்கலாம்" என்றார்.

ஆம், உண்மைதான் அது! குழந்தைகளே, நீங்கள் இப்பொழுது இளம் வயது உடையவர்களாக இருக்கின்றீர்கள். நீங்கள் பெரியவர்களாக ஆகி, உங்களுடைய கடந்தகால வாழ்க்கையை பற்றி நீங்கள் நினைத்து பார்க்கும் பொழுது, அதில் வருத்தப்படும்படியாக எதுவும் இருக்க கூடாது. அந்த அளவிற்கு, நீங்கள் உங்கள் வாழ்க்கையை அமைத்து கொள்ள வேண்டும். இன்று, உலகத்தில் பெரிய கண்டுபிடிப்புகளை செய்துள்ள பெரிய அறிஞர்கள் கூட, தங்களுடைய அறிவில், பத்து சதவிகிதம்தான் செலவழித்து உள்ளார்கள் என்றால், உங்கள் முழு





அறிவின் சக்தி எத்தகையது என்பதை பார்த்துகொள்ளுங்களேன்! நல்ல புத்தகங்களை படியுங்கள். வாழ்க்கையில் சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாற்றை படியுங்கள். நல்ல ஒழுக்கம், அன்பு, பண்பு இவைகளை கை கொள்ளுங்கள். மனம், உடல், அறிவு இவைகளை எப்பொழுதும் ஆரோக்கியமாக வைத்து கொள்ளுங்கள். திடீர் என்று யாரும் ஸாதனையாளர்களாக ஆவதில்லை. அவர்களுடைய சிறுவயதை பார்த்தீர்களானால், அப்பொழுதே அத்தகைய ஆற்றல், அறிவு எல்லாம் அவர்களிடம் புதைந்து கிடக்கும் என்பது தெரிய வரும்.

எந்த நவீன வசதியும் இல்லாத காலத்தில், கிரேக்க நாட்டிலிருந்து இந்தியாவிற்கு படையெடுத்து வந்தவர் அலெக்ஸாண்டர். உலகம் முழுவதையும் தன் ஆளுமைக்கு கொண்டு வர பார்த்தார். அலெக்ஸாண்டரின் சிறு வயதில் நடந்த ஒரு சம்பவம். ஒரு நல்ல குதிரை கொண்டு வரப்பட்டது. அந்த குதிரையோ யாருக்கும் அடங்காமல் மிரள ஆரம்பித்தது. குதிரை வித்தையை நன்றாக தெரிந்த சிப்பாய்கள் கூட, அந்த குதிரையின் அருகில் செல்ல பயந்தார்கள். சிறுவனான அலெக்ஸாண்டர் தைரியமாக குதிரையினிடம் சென்றார். அந்த குதிரையை சில நொடிகளில் அடக்கி, அதன் மீது ஏறி அமர்ந்தும் விட்டார். இதற்கு காரணம், அலெக்ஸாண்டரிடம் இருந்த வீரம் மட்டும் அல்ல. விவேகமும்தான் காரணம். மற்ற வீரர்கள், அந்த குதிரையை எப்படி அடக்கலாம் என்று மட்டும்தான் யோசித்தார்கள். ஆனால் சிறுவன் அலெக்ஸாண்டரோ, குதிரை ஏன் மிரளுகின்றது என்பதை ஆராய்ந்தான். அது தன்னுடைய நிழலை பார்த்துதான் மிரளுகின்றது என்பதை புரிந்து கொண்டார். அவர், அதனை திருப்பி வேறு புறமாக நிற்க செய்து, அதன் நிழல் அதற்கு தெரியாமல் செய்தார். அவ்வளவுதான்! அதன் பயம் அடங்கியது. அலெக்ஸாண்டரும் அதை சுலபமாக அடக்கிவிட்டார். ஆகவே குழந்தைகளே! சிறிய வயதிலேயே உயர்ந்த குறிக்கோளுடன் வாழ கற்றுக்கொள்ளுங்கள்.



# பாகவத பழம் 8

**இரண்டாம் பாகம்**

– ஸ்ரீஸ்வாமிஜி

பகவத்கீதையில் அர்ஜுனன் கேட்ட கேள்விக்கும் பதிலுக்கும் மேலும் விளக்கம் கொடுக்க நடந்த ஒரு சரித்திரத்தைக் கூறி ஸ்ரீமத் பாகவதம் புரிய வைக்கின்றது. அதுதான் ஜடரபதரின் கதை. அதுபோல் பகவத் கீதையில் என்னுடைய பக்தனுக்கு நாசம் என்பதே கிடையாது'' என்பதுபோல கீழ்க்கண்ட ஸ்லோகம் வருகின்றது:

*க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா ஸச்வச்-சாந்திம் நிகச்சதி*
*கௌந்தேய ப்ரதிஜானீஹி நமே பக்த: ப்ரணச்யதி (கீதை-9-31)*

அஜாமிளனுடைய கதையைக் கூறி, என்னுடைய பக்தனிடம் எவ்வளவு தோஷம் இருந்தாலும் அவன் பக்தன்தான். அந்த தோஷங்களை நான் விசாரித்துக்கொள்கிறேன் என்பதன் விளக்கத்தை இங்கு காணலாம். பகவத்கீதையில், தியான யோகத்தில் எப்படி தியானம் செய்யவேண்டும் என்பதை விளக்குவதன் செயல்முறைதான் துருவசரித்திரம். ஞானயோகத்தின் ஸாரம்தான் ரிஷபயோகீஸ்வரரின் சரித்திரம். அதுபோல் சரணாகதியின் முழுவிளக்கமுமே அம்பரீஷனுடைய சரித்திரம். சரணாகதி எப்படி செய்யவேண்டும் என்பதைச் சொல்வது கஜேந்திர சரித்திரம். பக்தியோகத்தின் விளக்கம்தான் பிரஹ்லாத சரித்திரம். ஆர்த்தியான உத்தரை, கஜேந்திரன், அர்த்தார்த்தியான தேவர்கள், ஜிக்ஞாஸுவான ஜடபரதர், ஞானியான ரிஷபயோகீஸ்வர், ஆத்ம நிவேதனம் செய்த பலிச்சக்ரவர்த்தி என்று பகவத்கீதையில் சொல்லப்பட்ட எல்லாவிதமான பக்தர்களையும் பாகவதத்தில் காணமுடிவதால் ஸ்ரீமத்பாகவதம் பகவத்கீதையின் உரையே என்றால் மிகையாகாது.

மீரா தன்னுடைய, "ஹரிகுணகாவத நாசூங்கி பிரபு



குணகாவத நாசூங்கி''என்ற பாடலில் அப்னே மந்திரம் மே பைட் பைட் கர், கீதாபாகவத வாசூங்கி'' என்பதற்கு அர்த்தம் க்ருஷ்ண மந்திரத்தில் அமர்ந்து கீதையும், பாகவதமும் படிக்கவேண்டும்'' என்பார்கள். உண்மை அதுவல்ல. கீதையான பாகவதத்தை படிப்பது என்பதே அதன் பொருள் ஆகும்.

## ஸ்ரீமத்பாகவதம் - முதல் ஸ்கந்தம் அத்யாயம் - 1

ஜன்மாத்யஸ்ய'' என்ற ஒரு பதத்துடன் ஸ்ரீ வேத வியாஸர் ஸ்ரீமத்பாகவதத்தை ஆரம்பிக்கின்றார். இந்த ஸ்லோகத்தில் மேலும், ஸத்யம், தீமஹி என்ற பதங்களும் வருகின்றன. ஜன்மாத்யஸ்ய'' என்பது ப்ரும்ம ஸூத்ரத்தின் ஒரு வாக்கியம். ஸத்யம்'' என்ற பதம் ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரும்ம'' என்று உபநிஷத்தில் வருகின்றது. தீமஹி'' என்ற பதம் காயத்ரீயில் வரக் கூடிய ஒரு பதம். சக்கரவர்த்தி வியாஸர், முதல் ஸ்லோகத்திலேயே இந்த பாகவதமானது பிரும்ம ஸூத்ரம், உபநிஷத் மற்றும் காயத்ரியின் ஸாரம் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றார். ஸத்யம் பரம் தீமஹி'' என்று அந்த ஸ்லோகம் முடிகின்றது. தீமஹி'' என்றால் தியானம் செய்வோம். பரம்'' என்றால் எதைக்காட்டிலும் உயர்ந்தது ஒன்று இல்லையோ அது பரம். ஸத்யம்'' என்றால் எது அழியாததோ, எந்த மாறுதலுக்கும் உட்படாததோ அது ஸத்யம். அந்த ஸத்யத்தை பாகவதம், நாமகீர்த்தனம், கதா சிரவணம் மூலமாக தியானம் செய்யச்சொல்கின்றது.

பகவான் என்றவுடன் நம்மைக் காட்டிலும் சக்தியுடையவன் என்ற ஒரு கோணத்தை மட்டும்தான் எல்லோரும் பார்க்கின்றார்கள். ***அவன் ஞானிகளுக்கும் பிதா, அக்ஞானிகளுக்கும் பிதா.***

(கனியும்)



# எது பக்தி?

நாம் தினமும் க்ருஷ்ணனுக்கு நித்யோத்ஸவம் நடத்தி வருகின்றோம்.மஹாமந்திர கீர்த்தனம் செய்து வருகின்றோம்.அதே ஸமயத்தில் மற்ற தெய்வங்களை நிந்திப்பதும் இல்லை. அவர்களையும் வணங்குகின்றோம். ஆனால் பக்தி ஒருவரிடம் மட்டும்; அது க்ருஷ்ணனிடம் மட்டும்தான். மற்ற தெய்வங்களுக்கு பூஜை, வணக்கம், மரியாதை உண்டு. பலர் நம்மை ஏதோ குறுகிய மனப்பான்மை உடையவர்களாகவும், விசித்திரமாகவும் பார்க்கின்றனர்கள். எல்லா தெய்வமும் ஒன்றுதானே? அப்படி இருக்க, எல்லா தெய்வங்களையும் வழிபட்டால் என்ன தவறு என்பார்கள். அவர்களை பார்த்து, நாம் இப்படி கேட்கலாமே? எல்லா தெய்வங்களும் ஒன்றுதான் என்கின்றபொழுது ஒன்றை மட்டும் வழிபட்டால்போதுமே?

முதலில் பக்தி என்பதையும், பக்தன் என்பவன் யார் என்பதையும் புரிந்து கொண்டால், இந்த குழப்பம் வராது. எல்லா தெய்வங்களையும் வழிபடுபவன், பிறமதங்களின் தெய்வங்களையும் வழிபடுபவன், ஜோதிஷம், பரிகாரம், வாஸ்து, என்று இருப்பவன் இவர்கள் எல்லோரும் ஆஸ்திகர்கள். ஆஸ்தி என்ற வடமொழி சொல்லுக்கு "உண்டு" என்று பொருள். நமக்கு மேலே ஒரு சக்தி இருக்கின்றது. அதை எப்படி வேண்டுமானாலும் வழிபடலாம். எப்படியோ அதன் அருளை பெற்றால் போதும் என்று நம்பி வழிபடுபவர்கள் ஆஸ்திகர்கள்.

தமிழ்நாட்டில் தான் முதல் பக்தர்களான முதலாழ்வார்களும், மற்ற ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றினார்கள்.அவர்கள் காட்டிய பாதைதான் நாம் போகும் பாதை. நாயன்மார்கள் சிவனை தவிர வேறு தெய்வத்தை வழிபடவும் இல்லை; பாடவும் இல்லையே. அவர்கள் குறுகிய மனம் படைத்தவர்களா? ஆழ்வார்கள் திருமாலை தவிர வேறு தெய்வத்தை வழிபடவில்லையே? அவர்கள் குறுகிய மனம் படைத்தவர்களா? புராணத்தில் ஹனுமான் ராமரை தவிர வேறு தெய்வத்தை



அறியாமல் இருந்தாரே! ஹனுமார் குறுகிய மனப்பான்மை உடையவரா? கோபிகைகள் க்ருஷ்ணரை தவிர வேறு யாரையும் தெரிந்து கொள்ளாமல் இருந்தார்களே! அது குறுகிய மனப்பான்மையா? கற்புநெறி உள்ள ஒரு பெண், தன் கணவனை தவிர வேறு யாரையும் திரும்பி பார்க்காமல் இருக்கின்றாளே அது தவமா? அல்லது குறுகிய மனப்பான்மையா? அப்படி பக்தி செய்பவர்களுக்கு, வேறு தெய்வத்தை பற்றி நினைக்கக்கூடாது என்றெல்லாம் கிடையாது. சூழ்நிலையை உத்தேசித்து, ஏதோ ஆஸ்திகனாக இருந்தால் போதும் என்று நினைத்திருக்கலாம்.

ஒருவன் ஏதோ ஒரு பொருளை பார்த்து மயங்கி அப்படியே நின்று விடுகின்றான். மற்றவன் அவனை அழைத்தாலும் வரமாட்டேன் என்கின்றான். "இருடா! எனக்கு எத்தனை பார்த்தாலும் போதவுமில்லை. சலிக்கவும் இல்லை" என்று பார்த்ததையே பார்த்துக் கொண்டிருக்கின்றான். அதற்காக, மற்ற பொருள் அவனுக்கு வெறுப்பு என்று பொருளாகுமா? இல்லை இல்லை! அவன் பார்த்த பொருளில் அப்படி ஒரு ஆகர்ஷணம் (ஈர்ப்பு) என்றுதான் பொருள் அல்லவா? உண்மையை சொன்னால், என் மேல் கோபம் வரும்! ஏன் என்றால், உண்மை கசக்கும் அல்லவா?

பல தெய்வங்களிடம் பக்தி செய்பவனாக தன்னை நினைத்து கொண்டிருப்பவனுக்கு, எந்த தெய்வத்திடமும் பக்தி கிடையாது. எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகின்றது. ஒரு நண்பன் தன்னுடைய நண்பனிடம் பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது முதலாம் நண்பன் மற்றவனைப் பார்த்து, "என்னிடம் இரண்டு வீடுகள் இருந்தால் உனக்கு ஒன்றை தந்துவிடுவேன்" என்றானாம். அடுத்தாக என்னிடம் இரண்டு கார் இருந்தால் ஒன்றை உனக்கு தருவேனென்றானாம். உடனே இரண்டாவது நண்பன் , "இரண்டு சைக்கிள்கள் இருந்தால் என்ன செய்வாய்" என்று கேட்டானாம். அதற்கு முதலாமவன் "உனக்கு ஒன்று கூட தரமாட்டேன்" என்று உடனே சற்றும் தாமதிக்காமல் பதில் சொன்னான். ஏன் என்றால்



அவனிடம் உண்மையிலேயே இரண்டு சைக்கிள்கள் உள்ளது. அதுபோல் எல்லா தெய்வத்திடமும் தனக்கு பக்தி என்று ஒருவர் சொன்னாலே அவருக்கு எந்த தெய்வத்திடமும் பக்தி இல்லை என்பதே உண்மை.

பக்தி என்பது நம்முடைய இஷ்ட தெய்வத்தின் மீது ஏற்படக்கூடிய எல்லை இல்லா காதல். காதல், தூய்மையான அன்பு. அந்த காதலை பகிர்ந்துகொள்ள முடியாது. ஒரு கணவன் ஒரு பெரிய அலுவலகத்தில் தலைவனாக இருக்கின்றான். அங்கு பலர் வேலை செய்கின்றார்கள். அப்படி வேலை பார்ப்பவர்கள் அனைவரையும் அந்த கணவனான தலைவன், பொறுப்புடன் கவனித்து அன்புடன் பழகி அவர்களை வழிநடத்துகின்றான். ஆனால் அதே அலுவலகத்தில் வேலைபார்க்கும் ஒரு பெண் மீது மையல் கொள்வானாகில், மனைவியால் அதை தாங்கிக் கொள்ள முடியவில்லை; துடிக்கின்றாள். அலுவலகத்தில் தன் கணவன் மற்றவர்கள் மீது கொண்ட உறவிற்கும், தற்பொழுது ஒரு பெண்ணுடன் ஏற்பட்ட உறவிற்கும் ஒரு வித்யாசம் இருக்கின்றது. அதை சொல்லமுடியாது. மற்றது பொறுப்புணர்வு; பாதுகாப்பு. இது அன்பு.

நம்மிடம் செல்வம் உள்ளது போல், அறிவும் உள்ளது போல், அன்பும் உள்ளது. கணிதம், பௌதிகம், வானியல், மருத்துவம் என்று ஒரு துறையை தேர்ந்தெடுக்க வேண்டும். அதில் ஒருமுகமாக கவனம் செலுத்தி, அதை முழுவதுமாக கற்று முடித்த பிறகு, அந்த அறிவை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளவேண்டும். அதுபோல் ஒரு தொழிலில் கவனம் செலுத்தி, இரவு பகலாக உழைத்து பணம் சேர்க்கவேண்டும். பிறகு, அந்த செல்வத்தை, எல்லோருடனும் பகிர்ந்துகொள்ளவேன்டும். அதுபோல் அன்பே உருவமான தெய்வத்திடம் அன்பு செலுத்தி, அந்த அன்பை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

பல துறைகளிலும் கவனத்தை செலுத்துபவன் எந்த ஒரு துறையிலும் முழுமை பெறமாட்டான். "ஜாக் ஆஃப் ஆல் ஆர்ட்ஸ்,



மாஸ்டர் ஆஃப் நன்" ஒரு ஆங்கில மேற்கோள், அப்படித்தான் இருப்பான். அதுபோல் மாறி மாறி பல தொழில்களை செய்பவன் பொருள் ஈட்டமாட்டான். அதுபோல், எல்லா தெய்வத்திடமும் அன்பு செலுத்துபவன், எதிலும் முழுமை பெறமாட்டான்.

சரி! காஞ்சிபெரியவர், சிருங்கேரி பெரியவர், ஞானானந்தர் போன்ற மஹான்கள் எல்லாம் இப்படி சொல்லவில்லையே. அவர்களை விட நீங்கள் பெரியவரா? அவர்களுக்கு தெரியாததா? என்று நீங்கள் கேட்கலாம். முதலில் நீங்கள் அடிப்படையான ஒன்றை புரிந்துகொள்ளவேண்டும். ஒரே பரமாத்மாவை அடைவதற்கு, த்யான யோகம், ராஜயோகம், கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்று பலவழிகள் உண்டு. நான் இப்பொழுது பேசிவருவது எல்லாம் பக்தியோகத்தை பற்றி மட்டும்தான். கர்மயோகியோ, ஞானயோகியோ, த்யானயோகியோ, ராஜயோகியோ ஒரே தெய்வத்தைத்தான் வழிபடுவார்கள் என்று சொல்லமுடியாது. அது அவர்களுக்கு அவசியமும் கிடையாது. செயல்களிலேயே குறியாக இருக்கும் கர்மயோகி, எந்த தெய்வத்தை வழிப்பட்டால் என்ன? தெய்வமும் அறிவின் கற்பனையே என்று சொல்லும் ஞானயோகி, ஒரு தெய்வத்தையே வழிபடவேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா? மூலாதாரத்திலிருந்து சுஷும்னையை ஏற்றி, சக்கரங்களை தாண்டி கொண்டுபோவதையே குறியாக கொண்ட ராஜயோகிக்கும், ஒரே தெய்வ வழிபாடு அவசியமில்லை. மனதை ஒருமுகப்படுத்தி, மனோலயம் அடைய பிரயத்தனிக்கும் த்யான யோகிக்கும் தெய்வத்திடம் அன்பு தேவையில்லை. இவர்களை பொறுத்த வரையில் எல்லாம் ஸாதனை என்பது மனதில் உள்ள அழுக்கை போக்கிக் கொள்வதற்கே! இவர்கள் யாருடைய சரித்ரத்திலும், இவர்கள் ஆடினார்கள், பாடினார்கள், தன்னைமறந்து குதித்தார்கள், மூர்ச்சையானார்கள் என்பதையெல்லாம் பார்க்கவே முடியாது. எல்லாம் ஒரே லட்சியம்தான் என்றால், பக்தியை வற்புறுத்துவானேன்? என்ற கேள்வி எழலாம்.



அதற்கு முதல் காரணம், ஒரே தெய்வத்திடம் ஈடுபாடு கொண்டவர்களை ஏதோ குறுகிய மனப்பான்மை உடையவர்களாக பலரிடம் உள்ள தவறான எண்ணத்தை போக்குவதற்காக விளக்க வேண்டியது. இரண்டாவதாக பக்தியே ஆனந்தமானது. எப்படி என்றால் ஒருவன் இரவு கண்விழித்து, கிரிக்கெட் விளையாட்டு பார்க்கின்றான். உடம்பை கெடுத்து கொள்கின்றான். ஆபீஸ் லீவு போடுகின்றான். என்ன பலன் என்று கேட்டால் அந்த விளையாட்டை பார்த்ததே பலன் என்கின்றான். எவ்வளவு ஸ்வாரஸ்யமாக இருந்தது என்கின்றான். நன்றாக கவனிக்கவேண்டும். விளையாட்டில் அவன் ஆடவும் இல்லை. விளையாட்டை பார்த்ததே, அவனுக்கு அவ்வளவு ஆனந்தத்தை தருகின்றது. டிக்கெட்டை வரிசையில் நின்று வாங்கியாவது சினிமா பார்க்கின்றான். "சினிமா இவ்வளவு கஷ்டப்பட்டு பார்த்தாயே, என்ன பலன்" என்றால் "பார்த்ததே ஆனந்தம். அதுவே பலன்" என்கின்றான். இவைகளை போல்தான் பக்தியும். பக்தியினால் என்ன பயன் என்று ஒருவன் கேட்டுவிட்டாலே, அவன் பக்தன் ஆவதற்கு தரம் ஆகாதவன். அதுபோல், "நான் இவ்வளவு பக்தி செய்தேனே. செய்து என்ன கண்டேன்" என்று கேட்டுவிட்டாலும் அவன் செய்தது பக்தி ஆகாது. பக்தி மட்டும்தான் செய்யும்பொழுதே சுகம் தரகூடியது. ராமானுஜர்,மத்வர் இருவரிடமும் பக்தி பிரகடனமாகவும், ஞானம் அந்தர்கதமாகவும் இருந்ததால், அவர்களுடைய சம்ப்ரதாயத்தில் பக்திக்கு முக்கியத்துவம் இருக்கின்றது. சங்கரரிடம் ஞானம் பிரதானமாகவும், பக்தி அந்தர்கதமாகவும் இருந்ததால், இன்றுவரை அந்த சம்ப்ரதாயத்தில், எல்லா தெய்வ வழிபாடும் காணமுடிகின்றது.

எல்லா தெய்வங்களும் சமம் என்று கூறும் அத்வைதிகள் கூட ஆசார்யரை பக்தி செய்யும்பொழுது சங்கரரை மட்டும்தான் பக்தி செய்யவேண்டும் என்கிறார்கள். ஏன் என்றால் தத்துவத்தில் வித்யாசம் உள்ளது என்கிறார்கள். அதுபோல் தெய்வ



தத்துவங்களிலும் வித்யாசம் உள்ளதே. அப்படி இருக்க எல்லா தெய்வத்தையும் எப்படி வழிபடமுடியும்? இதற்கு என்ன பதில் வைத்துள்ளார்கள் அத்வைதிகள்?

ஸ்மார்த்தர்களாகவும், அத்வைதிகளாகவும் இருந்தும், சாஸ்திரக்ஞர்களாக இருந்தும், நாராயணதீர்த்தர், விஜயகோபாலஸ்வாமி, மதுஸூதனஸரஸ்வதி, தியாகராஜர் போன்றவர்கள் ஹரிபக்தியே செய்தது இங்கு கவனிக்கத்தக்கது. அதுபோல் ஜீவன் முக்தரான ப்ரும்மேந்திராள் "ஸர்வம் பிரும்மயம்" என்று கூறிவரும் பொழுது "கிம் பஜனீயம், கிம பஜனீயம்" என்றார். ஆனால் மற்றொர் கீர்த்தனத்தில் "பஜரே யதுநாதம்" என்பதும் இங்கு கவனிக்கதக்கது.

வேதாந்த விசாரம் செய்பவர்கள், பிரணவ ஜபமும் நேதி, நேதி என்று விசாரணையும் மட்டும் செய்து வரட்டும். அதுமுடியாமல் உபாசனைக்கு இறங்கினால், எந்த தெய்வம் உபாசிக்கத்தக்கது என்ற விசாரமும் அவசியமே. ரமணருக்கு மரணத்தை பற்றி கேள்வி எழுந்த உடனே, அது பயமாக மாறியது. அதனால் அந்தக்ஷணமே கட்வாங்கரை போல் ஞானத்தை அடைந்து ஜீவன்முக்தரானார் ரமணர். அவர் ஜீவன்முக்தர் ஆனபிறகுதான் பல துதிகளை எழுதியுள்ளார். ஆனால் அவை சிவபெருமான் மேல் மட்டும், இன்னும் சொல்லப்போனால் பிரத்யேகமாக அருணசலத்தின் மீது எழுதப்பட்டதே தவிர, வேறு ஒரு தெய்வத்திடமும் இல்லை. ஞானியே உயர்ந்த உத்தம பக்தன் என்பதற்கு இதைவிட என்ன பிரமாணம் வேணடும்? அதுபோல் ராகபக்தி ஸித்தித்தவனே உயர்ந்த ஞானியும்கூட.

✧845 destinations in India /97 major countries around globe

EMS SPEEDPOST